A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 08 / 2022</u>**

திரு K. ராஜங்கம்,
50, ஸ்பென்சர் காம்பவுண்ட்,
திண்டுக்கல் – 624 003.

……மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு S. ஆனந்த்குமார்)

எதிர்

1. செயற்பொறியாளர்/வடக்கு/திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சிநாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

2. உதவி செயற்பொறியாளர்/நகர்/ திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சௌந்தர்ராஜா மில்ஸ் ரோடு,
தொழிற்சாலை ரோடு அருகில், திண்டுக்கல் – 624 002.

3. உதவி மின்பொறியாளர்/நகர்/பேருந்து நிலையம்/ திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சௌந்தர்ராஜா மில்ஸ் ரோடு,
தொழிற்சாலை ரோடு அருகில், திண்டுக்கல் – 624 002.

...... எதிர்மனுதாரர்கள்

(திருமதி. P. சாந்தி, செயற்பொறியாளர்/வடக்கு/திண்டுக்கல்
திரு V. கார்த்திக், உதவி செயற்பொறியாளர்/நகர்/ திண்டுக்கல்
திரு V. கணேசன், உதவி மின்பொறியாளர்/நகர்/பேருந்து நிலையம் / திண்டுக்கல்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 07-01-2022</u>**

**<u>கேட்புரை நாள்: 10-03-2022</u>**

**<u>ஆணை நாள்: 19-05-2022</u>**

07.01.2022 அன்று பெறப்பட்ட திரு K. ராஜங்கம், 50, ஸ்பென்சர் காம்பவுண்ட், திண்டுக்கல் – 624 003 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 08/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 10.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மின் இணைப்பு எண் 220-016-322-இல் தற்போது வணிக மின் கட்டணமாக வசூலிக்கப்படுவதை தவிர்த்து வீட்டு மின் கட்டணமாக வசூலிக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர் வீடும் அலுவலகமும் மேற்படி விலாசத்தில் இயங்கி வருவதாகவும், தனது மின் இணைப்பில் வசூலிக்கப்படும் வணிக மின் கட்டணத்தை வீட்டு மின் கட்டணமாக வசூலிக்க வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளரின் இடத்தை உதவி செயற்பொறியார்/நகர்/திண்டுக்கல் மற்றும் உதவி மின்பொறியாளர்/நகர்/பேருந்து நிலையம்/ திண்டுக்கல் ஆகியோர் களஆய்வு செய்த போது மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின் இணைப்பு உள்ள வீட்டில் குடியிருக்காமல் தேவைக்கேற்ப அவ்வப்போது பயன்படுத்தி வருவது கண்டறிப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, தனது மின் இணைப்பை வீட்டு மின் கட்டண வீதப்பட்டியில் மாற்ற கோரி மேல்முறையீட்டாளர் திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம் 06.07.2021 நாளிட்ட தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இம்மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு:</u>**

திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 06.07.2021 நாளிட்ட ஆணையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

***<u>"Findings and order of the forum</u>:***

*திரு. K. ராஜாங்கம், B.A.B.L., அட்வகேட், 50, ஸ்பென்சர் காம்பவுண்ட, திண்டுக்கல் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில்.*

*தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் Tariff order TP. No. 01 of 2017 dt. 11.08.2017 para No. 6.2.21 (g) ல் தெரிவித்துள்ளது போல் வீட்டு உபயோகத்துடன் 200 சதுரடிக்கு மிகாமல் உள்ள அலுவலக பயன்பாட்டில் உள்ள அறைக்கு மட்டுமே வீட்டு உபயோக விகிதப்பட்டி பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் செயற்பொறியாளரின் கள ஆய்வில் மின் இணைப்பு எண் 220–016–322 யை தாங்கள் அலுவலக பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்துவதாக அறிக்கை சமர்பித்துள்ளார். எனவே மின் இணைப்பு எண் 220–016–322ல் விகிதப்பட்டி V இருந்து விகிதப்பட்டி IA ஆக மாற்றம் செய்ய இயலாது என்று மன்றத்தால் முடிவு செய்யப்பட்டு தங்களது மனு இம்மன்றத்தால் தள்ளுபடி செய்யப்படுகிறது."*

4.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>**:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 10.03.2022 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு S. ஆனந்த்குமார் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி. P. சாந்தி, செயற்பொறியாளர்/வடக்கு/திண்டுக்கல், திரு V. கார்த்திக், உதவி செயற்பொறியாளர்/நகர்/ திண்டுக்கல் மற்றும் திரு V. கணேசன், உதவி மின்பொறியாளர்/நகர்/பேருந்து நிலையம்/திண்டுக்கல், திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளரின் வீடும் வழக்கறிஞர் அலுவலகமும், மேற்படி விலாசத்தில் இயங்கி வருவதாகவும், அதன் மின் இணைப்பு எண்.052200160322 ஆகும் எனவும், வழக்கறிஞர் அலுவலகம் மட்டும் இயங்கினாலும், அது Commercial என குறிப்பிடாமல், சாதாரண மின் கட்டணம் தான் வசூல் செய்யப்பட வேண்டும் என தமிழ்நாடு மின்குறைதீர்ப்பாளர் Appeal Petition No. 36/2010–இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 ஆணை நாள் 06.07.2021 என முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் களஆய்வு செய்து விரிவான அறிக்கையை 12.07.2021–க்குள் சமர்ப்பிக்க வடக்கு செயற்பொறியாளர், திண்டுக்கல் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும், இதில் எந்த தேதியில் வடக்கு செயற்பொறியாளர் திண்டுக்கல் அவர்கள் கள ஆய்வு செய்தார் என்றும், எந்த தேதியில் அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், அந்த அறிக்கையின் நகல் ஏன் மனுதாரருக்கு அளித்து அவரது வாதுரை கேட்க சந்தர்ப்பம் அளிக்கவில்லை

என்றும், அவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதா இல்லையா என்றும் விரிவாக ஆணையில் விவரிக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேலும், கள ஆய்வு அறிக்கை மனுதாரருக்கு வழங்காமல், மனுதாரரது விளக்கம் கேட்காமல் ஆணை பிறப்பித்துள்ள செயல் ஒருதலைப்பட்சமானது என்றும், இது இயற்கை நீதிகோட்பாட்டிற்கு எதிரானதாகும் எனவும், ஆணை நாள் 06.07.2021 என குறிப்பிட்டுள்ள நிலையில் களஆய்வு 12.07.2021 மேற்கொள்ளப்பட்டு மேற்படி ஆணை நகல் மனுதாரருக்கு 4 மாதங்களுக்குப் பின் 18.11.2021 ஆம் தேதி காலதாமதமாக கிடைக்கப் பெறும் வகையில் சார்பு செய்துள்ளது சட்டப்படியும் நியாயப்படியும் முறையற்ற செயலாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 வடக்கு செயற்பொறியாளர், திண்டுக்கல் மின்சாரவாரிய சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு முறையான களஆய்வு மேற்கொள்ளவில்லை எனவும், அவர் மின் இணைப்பு எண்.220-016-322-இல் வீட்டில் ஒரே பெரிய அறையாக உள்ளது என குறிப்பிட்டுள்ளது சுத்த பொய்யான சங்கதி எனவும், மேலும், அவர்கள் குறிப்பிட்டுள்ளது போல 200 சதுர அடிக்கு மிகாமல், சுமார் 160 சதுரடி மட்டுமே உள்ள அறையை பயன்படுத்தி வருவதை முற்றிலும் மறைத்து மின்னிணைப்பு முழுவதும் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்துவதாக வடக்கு செயற்பொறியாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளது சட்டப்படி ஏற்புடையது அல்ல எனவும், எனவே, அவரது களஆய்வு அறிக்கையை நிராகரித்து மனுதாரர் தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து விகிதப்பட்டி V-இல் இருந்து விகிதப்பட்டி IA-க்கு மாற்றம் செய்தும் தண்டத்தொகை மற்றும் வணிக பயன்பாட்டில் கூடுதல் மின் கட்டணம் வசூல் செய்த நாள் முதல் மனுதாரருக்கு திரும்ப வழங்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்படி குறைதீர்க்கும் மன்றம் முறையாக விசாரணை செய்யாமலும், மனுதாரருக்கு சட்டப்படியான சந்தர்ப்பங்களை வழங்காமலும், தவறான கள ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மனுதாரர் கோரிக்கையை முற்றிலும் நிராகரித்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல எனவும், ஆகவே தற்போது Commercial Electric Charge ஆக வசூலிக்கப்படுவதை தவிர்த்து, சாதாரண மின் கட்டணமாக வசூலிக்க வேண்டுமாய் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 **<u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>**:

6.1 கடந்த 12.07.2021 அன்று திரு. K. ராஜாங்கம், அவர்களது மின் இணைப்பு எண்: 220-016-322 உள்ள இடமானது செயற்பொறியாளர் / வடக்கு / திண்டுக்கல் அவரது குழுவினர் உதவி செயற் பொறியாளர் / நகர் / திண்டுக்கல் மற்றும் உதவி மின் பொறியாளர் / நகர் பேருந்து நிலையம் / திண்டுக்கல் ஆகியோர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதாகவும், கள ஆய்வின் பொழுது மின் நுகர்வோர் மற்றும் அவரது பிரதிநிதி (மனுதாரரது மகன்) ஆகியோர் உடன் இருந்ததாகவும், கள ஆய்வின் விபரங்களானது அப்பொழுதே மின் நுகர்வோர் மற்றும் அவரது பிரதிநிதி ஆகியோரிடம் மேற்படி கட்டிடம் மற்றும் மின் இணைப்பு தொடர்பாக முழுவதுமாக எடுத்துரைக்கப்பட்டதாகவும், இதன் விபரங்களானது தலைவர், மின் நுகர்வோர் குறைதீர் மன்றம், திண்டுக்ல் அவர்களுக்கு அறிக்கையாக 26.08.2021 அன்று சமர்ப்பிக்கப்பட்டு, மனுதாரருக்கு 18.11.2021 அன்று குறைதீர் மன்றத்திலிருந்து ஆணையானது அனுப்பிவைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரர் உண்மை விபரங்களை மறைத்து எப்படியாவது வணிக வீதப்பட்டியலிருந்து வீட்டிற்கான வீதப்பட்டியலுக்கு மாற்றம் செய்வதற்கு முயற்சிப்பதாகவும், கடந்த 29.05.2015 அன்று மின் திருட்டு தடுப்பு குழு, திண்டுக்கல் அவர்களால் மேற்கண்ட மின் இணைப்பு எண் 220-016-322 ஆனது ஆய்வு செய்யப்பட்டு வீட்டு மின் இணைப்பானது முழுவதுமாக அலுவலகமாக பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டு மின் இழப்பீட்டுத் தொகையாக (Compounding of Offences ரூ.4000.00 + Extra Levy- ரூ.17200.00 = ரூ.21,200.00) வசூல் செய்யப்பட்டு, மேற்படி மின் இணைப்பானது 01.06.2015 அன்று வீட்டு மின் இணைப்பிலிருந்து வணிக மின் இணைப்பாக வீதப் பட்டியல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், "தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் Tariff order T.P. No: 01 of 2017 dt:11.08.2017 Para No:6.2.21 (g) கூறியுள்ளபடி வீட்டு உபயோகத்துடன் குடியிருக்கும் வீட்டில் உள்ள 200 சதுர அடிகளுக்கு மிகாமல் உள்ள அறையினை அவர்களது தொழிலுக்கான அலுவலகமாக உபயோகத்திற்கு பயன்படுத்தி கொள்ளலாம், அந்த அறைக்கு வீட்டு மின் இணைப்பு வீதப்பட்டியல் பொருந்தும் என்பதே ஆகும்." ஆனால் மனுதாரர் மேற்கண்ட மின் இணைப்பு உள்ள விட்டில் குடியிருக்காமல் தேவைக்கேற்ப

அவ்வப்போது பயன்படுத்தி வருவது கள ஆய்வின் போது கண்டறியப்பட்டது. மேற்கண்ட கள ஆய்வானது மிகவும் கவனமாகவும் மற்றும் சட்ட விதிகளுக்கு உட்பட்டுள்ளதா என ஆராயப்பட்டு கள ஆய்வு அறிக்கையானது தலைவர், திண்டுக்கல் மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டு, குறைதீர்க்கும் மன்றத்தால் முறையாக விசாரிக்கப்பட்டு உரிய சந்தர்ப்பங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு அதனடிப்படையில் தான் மனுதாரருக்கு வீதப்பட்டியல் மாற்றம் செய்து தரப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் மனுதாரர் வீட்டு மின் உபயோகத்தினை வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தியதை ஒப்புக்கொண்டு தண்டத் தொகையினை செலுத்தியுள்ளார். மேலும் வீதப்பட்டியலை மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்து வீதப்பட்டியல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மனுதாரர் கோருவது போன்று தண்டத்தொகை மற்றும் வணிக பயன்பாட்டில் கூடுதல் மின் கட்டணம் வசூல் செய்ததை திரும்ப வழங்க கோருவதை ஏற்க இயலாது எனவும், அவரது கோரிக்கையானது நியாயமான வகையில் இல்லாத காரணத்தால் முற்றிலுமாக நிராகரிக்கபடுகின்றது எனவும், எனவே மனுதாரருக்கு வணிக மின் இணைப்பிலிருந்து வீட்டு மின் இணைப்பாக மாற்றம் செய்தால் அது மின்சார வாரியத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுத்துவதுடன் தவறான முன் உதாரணத்தினை ஏற்படுத்தி விடக்கூடும் என்பதால் மேன்மைமிகு குறைதீர்ப்பாளர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையினை நிராகரித்து திண்டுக்கல் குறைதீர்க்கும் மன்றத்தால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட ஆணையினை உறுதி செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு.K.ராஜாங்கம், திண்டுக்கல், அவர்கள் தனது மின் இணைப்பு எண்.220-016-322-ல் தனது வீடும் தனது வழக்கறிஞர் அலுவலகமும் உள்ளதாக தெரிவித்துள்ளார். இதற்கு மின் கட்டணம் தாழ்வழுத்த வீதப்பட்டி-5ன் கீழ் விதிக்கப்படுவதாகவும், ஆனால் இதற்கு வீடுகளுக்கான சாதாரண மின்கட்டணம் தான்

வசூலிக்கப்படவேண்டும் என கோரியுள்ளார்.

7.3. தனது வழக்கறிஞர் அலுவலக பயன்பாட்டிற்கான அறை 200 சதுர அடிக்கு மிகாமல் சுமார் 160 சதுர அடி மட்டுமே உள்ள அறையை பயன்படுத்திவருவதை வடக்கு செயற்பொறியாளர் திண்டுக்கல் முழுவதும் மறைத்து மின்னிணைப்பு முழுவதும் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்துவதாக அறிக்கை அளித்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என தெரிவித்துள்ளார். மேலும் சரியாக களஆய்வு செய்யாமலும் உரிய சந்தர்ப்பங்களை வழங்காமலும் திண்டுக்கல் மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் தீர்வு வழங்கியுள்ளதால், அதனை மேல்முறையீடு செய்துள்ளார். முந்தைய Appeal எண்.36 – 2010ஐ மேற்கோள்காட்டி வழக்கறிஞர் அலுவலகம் மட்டும் இயங்கினாலும் அதனை வணிகபயன்பாடாக கருதாமல் சாதாரண வீட்டு மின் வீதப்பட்டியையே விதிக்கவேண்டுமென கோரியுள்ளார். மேலும் இதன்மூலம் வணிக பயன்பாட்டில் கூடுதல் மின் கட்டணம் வசூல் செய்த நாள் முதல் மனுதாரருக்கு திரும்ப வழங்கவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

7.4. எதிர்மனுதாரர், செயற்பொறியாளர், வடக்கு, திண்டுக்கல், அவர்கள் மின் இணைப்பு எண்.322 உள்ள வீடு ஒரே பெரிய அறையாக உள்ளது எனவும், அதில் வீட்டு உபயோகம் இல்லை என பதிலுரையில் தெரிவித்துள்ளார். மனுதாரர் உண்மை விபரங்களை மறைத்து எப்படியாவது வணிக வீதப்பட்டியிலிருந்து வீட்டிற்கான வீதப்பட்டியலுக்குமாற்றம் செய்ய முயற்சிக்கிறார். இம்மின் இணைப்பில் கடந்த 29.-05-2015 அன்று மின் திருட்டு தடுப்பு குழு, திண்டுக்கல் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு வீட்டு மின் இணைப்பாக (Domestic) இருந்ததை முழுவதுமாக அலுவலகமாக பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டு மின் இழப்பீட்டுத் தொகையாக (compounding of offences ரூ.4000 + Extra levy -ரூ.17,200) மொத்தம் ரூ.21,200 வசூல்செய்யப்பட்டு மேற்படி மின் இணைப்பானது 1.6.2015 அன்று வீட்டு மின் வீதப்பட்டியிலிருந்து இதர வகை வீதப்பட்டி-5ற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்போதும் மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின்இணைப்பு உள்ள வீட்டில் குடியிருக்காமல் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்திவருவது களஆய்வில் கண்டறியப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.5. மேற்கண்ட வாதுரையின் அடிப்படையில் காணும்போது குறைதீர்மன்ற நடவடிக்கையில் கடந்த 6.7.2021 அன்று நடைபெற்ற கேட்புரையில் வழங்கப்பட்ட அறிவுரையின் அடிப்படையில் செயற்பொறியாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரது அறிக்கையினை பெற்றபின்னர் அதனடிப்படையில் எந்தவொரு கேட்புரையும் நடைபெறாமல் நேரடியாக இறுதி ஆணை கடந்த 18.11.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது.

ஆகையால் ஆய்வறிக்கையின் மீதான எந்தவொரு விவாதமும் நிகழவில்லை என்பது தெளிவாகிறது.

7.6. மேலும் மேல்முறையீட்டாளர், மின்குறைதீர்ப்பாளரின் Appeal எண்.36-2010ல் வழங்கிய ஆணையினை மேற்கோளிட்டு வழக்கறிஞர் அலுவலகம் மட்டும் இயங்கினாலும் அது வணிக பயன்பாடாக கருதாமல் வீட்டிற்கான மின் வீதப்பட்டியில் (IA) வசூல் செய்யப்படவேண்டும் என கோரியுள்ளார். அவ்வாணையில் உள்ள வரிகள் கீழ்வருமாறு:

வீதப்பட்டி ஆணை எண்.3 – 2010, நாள்.31.7.2010, பத்தி : 9.11.10

> *(6) Consulting Rooms of any professionals attached to the residences of such professionals provided no trading is undertaken or no motive power is used in the Consulting Room.*

இப்பத்திகளின் அடிப்படையில் வழக்கறிஞரின் ஆலோசனை அறை அவரது வசிப்பிடத்தோடு அமைந்ததாகவும், எந்தவொரு வணிக நடவடிக்கையும் நடைபெறாதபட்சத்தில் வீதப்பட்டி-IA வகைப்படுத்தப்படும் என்பதே இதன் விளக்கமாகும். இது மேல்முறையீட்டாளரால் மாறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

7.7. நடைமுறையிலுள்ள வீதப்பட்டி ஆணை எண்.1 – 2017இன் படி **வழக்கறிஞரின் ஆலோசனை அறைக்கு** வீதப்பட்டி-IA (வீட்டு உபயோகம்) கீழ்க்கண்ட சமயத்தில் வழங்கப்படும்.

பத்தி – 6.2.2.1 – கீழ்வருமாறு:

> *(g) Consulting rooms of size limited to 200 square feet of any professionals attached to the residence of such professionals. This facility is extended exclusively to take advantage of using the residence by the professionals.*

எதிர்மனுதாரரின் வாதத்தின் அடிப்படையில் கடந்த 12.07.2021 அன்று மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு உள்ள வளாகம் மேல்முறையீட்டாளர் மற்றும் அவரது மகன் உடன்இருந்ததாகவும், ஆய்வின் விவரங்கள் அப்பொழுதே அவருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். குறைதீர் மன்றத்தில் ஆய்வின் விவரங்கள் நேரடி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாவிட்டாலும், அவை தற்போது கருத்திற்கொள்ளப்பட்டு எனது கேட்புரையில் விசாரிக்கப்பட்டது. அந்த ஆய்வில் வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை எனவும் முழுவதும் வழக்கறிஞர் அலுவலகமாக பயன்படுத்தி வருவதும் கண்டறியப்பட்டதாக எதிர் மனுதாரர் தெரிவித்துள்ளார். ஆயினும், எதிர்மனுதாரரின் ஆய்வினை தவறு என நிரூபிக்கும்வண்ணம் மேல்முறையீட்டாளர் அவ்வீட்டில் குடியிருப்பதற்கான உரிய விவரங்கள் **/ஆவணங்கள்** ஏதும் அளிக்காதபட்சத்தில் எதிர்மனுதாரரின் ஆய்வின் கருத்துக்களை

புறந்தள்ள இயலாது. மேலும், இத்தகைய உபயோக நிலையினை கருத்திற்கொண்டே கடந்த 29.5.2015 அன்று மின் திருட்டு தடுப்பு குழுவினால் தவறான வீதப்பட்டிக்கான இழப்பீட்டுத்தொகை விதிக்கப்பட்டுள்ளது என்பதையும் கருத்தில்கொள்ளவேண்டியுள்ளது. அதற்கு பிந்தைய காலத்தில் தற்போது அவ்வீட்டில் வசிப்பதற்கான ஏதேனும் ஆதாரங்கள் அல்லது எந்தவொரு முகவரியிட்ட சான்றுகளோ சமர்ப்பிக்காத நிலையில், அவ்வீட்டினை வசிப்பிடமாக கருதி தாழ்வழுத்த வீதப்பட்டி-IA கோரும் மேல்முறையீட்டினை ஏற்றுக்கொள்ளஇயலாது.

மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மனு S.M.P.No.2 of 2012 நாள்.1.10.2019ஐ விசாரிக்கையில் குடியிருப்பிடத்தில் உள்ள வழக்கறிஞரின் ஆலோசனை அறையிற்கு மட்டுமே வீதப்பட்டி-1ஏ வழங்கப்படும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

## 8.0 முடிவுரை:

8.1. பத்தி 7**–இல்** கண்ட தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பிற்கு வீதப்பட்டி-IA-ல் வகைப்படுத்தக் கோரும் மனுவினை தள்ளுபடி செய்கிறேன்.

8.2. இதனால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கவேண்டிய **நிவாரணம்** ஏதுமில்லை என தீர்வு செய்கிறேன்.

8.3. **மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 03/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

**செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

**1. திரு K. ராஜங்கம்,**
**50, ஸ்பென்சர் காம்பவுண்ட்,**
**திண்டுக்கல் – 624 003.**

2. செயற்பொறியாளர்/வடக்கு/திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சிநாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

3. உதவி செயற்பொறியாளர்/நகர்/ திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சௌந்தர்ராஜா மில்ஸ் ரோடு,
தொழிற்சாலை ரோடு அருகில், திண்டுக்கல் – 624 002.

4. உதவி மின்பொறியாளர்/நகர்/பேருந்து நிலையம்/ திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சௌந்தர்ராஜா மில்ஸ் ரோடு,
தொழிற்சாலை ரோடு அருகில், திண்டுக்கல் – 624 002.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
**திண்டுக்கல்** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் – 624 002.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.